**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.5/2019**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துளசிராமன் | மதம் | : இந்து |
| த/பெ | : மாணிக்கம் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : சக்கரமல்லூர் |
| தொழில் | : கட்டுமான வேலை | வட்டம் | : திருத்தணி |

**12.02.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 16.09.2010ம் தேதியிட்டு என் அப்பா என் அண்ணனுக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.09.2010ம் தேதியிட்டு என் அப்பா எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி–ன் கீழான சான்று தாக்கல் செய்கிறேன். **(சான்று பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)